# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ).,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 100/பேரூ/2024**
**நாள் : 06.03.2025**

திரு. K. வடிவேலு,
கன்னந்தேரி, சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, கன்னந்தேரி அஞ்சல், காட்டுவளவு, பொந்தனூர், க. எண். 8/231/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. வடிவேலு என்பவரின் 10.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.08.2024 அன்று பெறப்பட்டு, 100/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, கன்னந்தேரி அஞ்சல், காட்டுவளவு, பொந்தனூர், க. எண். 8/231/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. வடிவேலு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

i. “சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம் கொங்கணாபுரம் தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட கொங்கணாபுரம் டவுனில் கொங்கணாபுரம் ஒன்றிய குழுத்தலைவர் திரு. M. ராஜா என்பவருக்கு சொந்தமான நான்குமாடி கட்டடம் அனுமதியில்லாமலும், அனுமதிக்கு எதிராகவும் கட்டப்பட்டுள்ளதாகவும், நகராட்சிகள் சட்ட விதிகள் 1998–ன்படி நடவடிக்கை எடுக்க வேண்டி 07.02.2024 அன்று கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பிய புகார் மனுவிற்கு 07.02.2024 அன்று முதல் இன்றைய தேதி வரையில் யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ii. திரு. M. ராஜா என்பவரின் நான்கு அடுக்குமாடி கட்டடம் முறையான செட்பேக் அமைக்காமல் கட்டப்பட்டுள்ளது. அதில் அனுமதிக்கு எதிராக கட்டப்பட்டுள்ள நான்கு அடுக்குமாடி கட்டடத்தின் முதல் தளத்தில் முறையான அனுமதியில்லாமல் அம்மா அமுதம் பல் பொருள் சிறப்பங்காடி என்ற பெயரில் கடை நடத்தி வருகிறார்கள். அதன் பெயரில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு 14.02.2024 அன்று அனுப்பிய புகார் மனுவிற்கு இதுநாள் வரை எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

iii. 07.02.2024 மற்றும் 14.02.2024 ஆகிய இரண்டு புகார் மனுக்கள் மீது கொங்கணாபுரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் மேற்படி கட்டட உரிமையாளருக்கு சாதகமாக செயல்பட்டு வருகிறார் என்று சேலம் மண்டலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு கடந்த 06.03.2024 அன்று புகார் மனு அனுப்பியிருந்தேன். புகார் மனுமீது உரிய நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதம் எண்.ஓ.மு.எண்.1595/2024/பே3 நாள் 11.03.2024 மூலம் கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு குறிப்பாணை உத்தரவு கடிதம் அனுப்பியுள்ளார். உத்தரவு கடிதத்தின் பேரிலும் கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

iv. கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சியில் அனுமதிக்கு எதிராக கட்டப்பட்ட கட்டடம் சம்பந்தமாக பேரூராட்சியின் வாயிலாக வழங்கப்பட்டுள்ள அனுமதி கடிதம் மற்றும் விபரங்கள் அடங்கிய ஆவணங்களை தகவலாக வழங்க வேண்டி கடந்த 15.02.2024 அன்று தகவல் கோரும் மனு அனுப்பியிருந்தேன். தகவல் கோரும் மனுவிற்கு தகவல் வழங்கினால் கட்டட உரிமையாளருக்கும், தனக்கும் பாதிப்பு ஏற்பட்டு விடும் என்று கெட்ட எண்ணத்தில் பதில் தகவல் வழங்காமல், பதில் மறுப்பு கடிதத்தை கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சியின் கடிதம் ந.க. எண்.73/2024 நாள் 27.02.2024–ன் வழி அனுப்பியுள்ளார்.

v. எனது புகார் மனுவை பரிசீலித்து மேற்படி அடுக்குமாடி குடியிருப்பு வீட்டின் உரிமையாளருக்கு சாதகமாக செயல்பட்டு வரும் கொங்கணாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் மீது துறை ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

vi. நான்கு அடுக்குமாடி கட்டடம் முறையான அனுமதிக்கு எதிராக கட்டப்பட்டுள்ளதால் அதன் உறுதி தன்மை கேள்விக்குறியாகி உள்ளது. மேலும், முதல் தளத்தில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடிக்கு வரும் பொதுமக்களின் பாதுகாப்பும் கேள்வி குறியாகியுள்ளது. நான்கு அடுக்குமாடி கட்டடம் கட்டுவதற்குண்டான முறையான செட்பேக் இல்லாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் இயற்கை பேரிடர் காலங்களில் அருகில் உள்ள இணைப்பு கட்டடத்தின் பாதுகாப்பும், அதில் வசித்து வரும் குடும்பங்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது. எல்லாவிதத்திலும் சட்டத்திற்கு எதிராக அமைந்துள்ள கட்டடத்தின் பேரில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் செயல்பட்டு வரும் கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் பெயரில் உரிய சட்ட நடவடிக்கையும் துறைரீதியான நடவடிக்கை எடுத்தும் பின்வரும் காலங்களில் அனுமதிக்கு எதிராக உள்ள கட்டடத்தில் ஏதேனும்

அசம்பாவிதம் நடக்காமல் இருக்க வேண்டியும் அனுமதிக்கு மாறாக உள்ள கட்டடத்தின் பேரிலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" - என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.09.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கன்னந்தேரி அஞ்சல், பொந்தனூர் காட்டுவளைவு சார்ந்த திரு. K. வடிவேலு என்பவரால் வார்டு எண்.7 சங்ககிரி ரோடு பிள்ளையார் கோவில் தெரு பகுதியில் திரு. ராஜா என்பவரால், கட்டப்பட்டுள்ள கட்டடம், கட்டட விதிமுறைகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ளதாக புகார் அளித்ததின் பேரில், கட்டட உரிமம் வழங்கும் பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதில் 2015 ஆம் ஆண்டு கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி கடித ந.க.எண்.212/2015 நாள் 02.06.2015–ன் படி தரை தளம் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் உள்ளிட்டவைகளுக்கு கட்டடம் வரன்முறைபடுத்தி ஆணையிடப்பட்ட விவரம் கண்டறியப்பட்டது.

3 27.02.2024 ஆம் தேதிய கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி அலுவலக கடிதத்தின்படி கட்டடம் உரிமம் வழங்கப்பட்ட விவரங்கள் மட்டும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் வரைபட நகல்கள், செயல்முறை ஆணை நகல் மற்றும் துப்புரவு ஆய்வாளர் அறிக்கை உள்ளிட்ட தகவல்களை, தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 2(f) மற்றும் 8 (x) ஆகியவற்றின் கீழ் தனிநபர் சம்மந்தப்பட்ட கோப்புக்களை வழங்கிட கோரியதற்கு, பேரூராட்சிகளின் இயக்குநரக வலைதளத்தில் இருந்து பதிவிறக்கும் செய்து கொள்ளலாம் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட பதிலறிக்கையானது மனுதாரருக்கு திருப்திகரமாக இல்லை என்பதால் மேல்முறையீட்டு அலுவலர்/சேலம் மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்களுக்கு மனுதாரரால் விண்ணப்பிக்கப்பட்டதன் பேரில் உரிய தகவல்களின் நகல்களை மனுதாரருக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தனிநபர் தகவல்கள் வழங்கிட கட்டட உரிமையாளரான திரு. எம். ராஜா என்பவரிடம் ஆட்சேபணை உள்ளதா என தெரிவித்து கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி மூலம் கடிதம் அளிக்கப்பட்டது.

கட்டட உரிமையாளரான திரு. எம். ராஜா என்பவர் தனக்கு சொந்தமான கட்டடத்தின் ஆவணங்கள் கட்டட வரைபட நகல்கள் மற்றும் இதர விவரங்களின் நகல்கள் ஏதும் மூன்றாம் நபருக்கு தகவல்களாக வழங்கிடும் பட்சத்தில் அவற்றை முறைகேடாக பயன்படுத்திடும் சூழ்நிலை உள்ளதாகவும், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல்கள் வழங்கிட வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மனுதாரரால் சென்னை பேரூராட்சிகளின் இணை இயக்குநர் (பொது)க்கு புகார் மனுவாக அளிக்கப்பட்டதன் பேரில் விவரங்களை அறிக்கையாக தெரிவித்து கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

30.08.2024 அன்று பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மூலம் மனுதாரர் சமர்ப்பித்த புகார் மனுவில் தெரிவித்துள்ள கட்டடத்தினை, அதன் தற்போதைய உரிமையாளருடன் அளவீடு செய்யப்பட்டது.

i) மேற்படி கட்டடம் முழுமையாக கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

ii) மேற்படி கட்டடத்திற்கு இப்பேரூராட்சியின் கட்டட உரிம அனுமதி ந.க.எண்.212/2015 நாள் 02.06.2015 –இன்படி வரைபடத்தின் அடிப்படையில் 366 சதுர அடி தரைதளம் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் என மொத்தம் 1098 சதுர அடிக்கு மட்டும் கட்டடம் வரன்முறை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நேரடி ஆய்வின் போது தரை தளம் மற்றும் இரண்டாம் தளத்தின் அளவீடுகள் 32 x 19 என்ற (608 ச.அடியில்) அளவில் வரைபட வரன்முறை அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது.

iii) மூன்றாம் தளத்தில் 32 x 19 என்ற அளவீட்டில் 10 x 10 என்ற அளவில் ஒரு ரூம் மற்றும் மூன்று கழிப்பறைகளும் வரைபட வரன்முறை அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளது.

iv) கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதற்கு முடிவு சான்றிதழ் ஏதும் இப்பேரூராட்சியின் மூலம் வழங்கப்படவில்லை.

v) கட்டடத்தின் தரை தளத்தில் உள்ள வணிக கட்டடத்திற்கு ஒரு வரி விதிப்பும், முதல் தளத்தில் உள்ள வணிக கட்டடத்திற்கு ஒரு வரிவிதிப்பும், இரண்டாம் தளத்தில் வணிக கட்டடத்திற்கு ஒரு வரி விதிப்பும் என மூன்று (3) வரி விதிப்புகள் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | வரி விதிப்பு எண். | கதவு எண். | கட்டிடத்தின் விவரம் | கேட்பு தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1622 | 7/4/18/1 | தரைதளம் – வணிகம் | ரூ. 3,430/– |
| 2 | 1623 | 7/4/18/2 | முதல் தளம் –வணிகம் | ரூ. 3,430/– |
| 3 | 1624 | 7/4/18/3 | இரண்டாம் தளம் –வணிகம் | ரூ. 3,430/– |
| மொத்தம் | | | | ரூ.10,290/– |

vi) மேற்படி கட்டடத்திற்கு பேரூராட்சி மூலம் குடிநீர் வசதி (இணைப்பு எண்.839) செய்து தரப்பட்டுள்ளது. மின்சார வசதி பெறப்பட்டுள்ளது.

கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சியின் வரைபட அனுமதிக்கு மாறாக தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள பகுதிகளை கட்டட வரன்முறை அனுமதியில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றம் செய்திடவும், மூன்றாம் தளத்தில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்தினை அப்புறப்படுத்திடவும் தெரிவித்து தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற அபிவிருத்திகளை அகற்றுதல்) விதிகள் – 2022 விதி 5பி இன் படி மேற்படி கட்டடத்தின் உரிமையாளர் திரு. ராஜா என்பவருக்கு அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனுமதி அளிக்கப்படாமல் கட்டப்பட்டுள்ள கட்டடத்தினை அப்புறப்படுத்திட தவறும் பட்சத்தில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற அபிவிருத்திகளை அகற்றுதல்) விதிகள் – 2022 விதி 7 இன்படி கட்டடத்தினை பூட்டி சீல் வைத்து மேல்நடவடிக்கை தொடரப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்"என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 24.10.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20/09/2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. K. வடிவேலு என்பவர் 24.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

"சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 , சங்ககிரி ரோடு, பிள்ளையார் கோவில் தெருவில் அமைந்துள்ள நான்கு மாடி கட்டடம் பேரூராட்சியின் அனுமதிக்கு மாறாகவும் மற்றும் அனுமதியின்றி கூடுதல் கட்டடமும் முறையான இடைவெளியின்றி கட்டப்பட்டுள்ளது. இதுகுறித்து கொங்கணாபுரம் பேரூராட்சியில் மனு அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தவிர தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையின் விவரம் கோரியதிலும் தகவல்கள் தரப்படவில்லை. எனவே கொங்கணாபுரம் பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள மேற்காணும் கட்டடம் குறித்து உரிய சட்ட விதிகளின்கீழ் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தினை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" – என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரான கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. வே. திலகராஜ் என்பவர் 24.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

"கொங்கணாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட, சங்ககிரி ரோடு, பிள்ளையார் கோவில் தெரு பகுதியில் அமைந்துள்ள கதவு எண்கள் 7/4/18/1 முதல் 7/4/18/3 முடிய உள்ள திரு. M. ராஜா என்பவருக்கு பேரூராட்சியால் தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டடத்திற்கு தலா 366 சதுர அடி வீதம் மொத்தம் 1098 சதுர அடியில் கட்டடத்திற்கு மட்டும் 02.06.2015 அன்று வரன்முறைபடுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால் வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் நேரடி ஆய்வு செய்யப்பட்டதில், தரை தளம், முதல் மற்றும் இரண்டாம் தளங்களின் அளவீடு செய்ததில் தலா 684 சதுர அடியில் மொத்தம் 2052 சதுர அடியில் வரைபட வரன்முறை அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது. மேலும், பேரூராட்சியின் அனுமதி வழங்கப்படாத 3வது தளத்தில் 36 x 19 என்ற அளவீட்டில் 10க்கு 10 அளவில் ஒரு ரூம் மற்றும் மூன்று கழிப்பறைகளும் வரைபட வரன்முறை அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளது. இப்பேரூராட்சியின் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டடம் குறித்து கட்டட உரிமையாளர் திரு. M. ராஜா என்பவருக்கு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புறம் மற்றும் ஊரமைப்பு சட்டத்தின்படி உரிய படிவம் 1, 18.09.2024 அன்றும், படிவம் 2, 4.10.2024 அன்றும் படிவம் 4, 14.10.2024 அன்றும் வழங்கப்பட்டு வரைபட அனுமதியில் உள்ளவாறு கட்டங்களை மாற்றம் செய்திடவும் மூன்றாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டத்தினை அப்புறப்படுத்தவும் பேரூராட்சியால் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இந்த நடவடிக்கையினை 4 மாத காலத்திற்குள் முடிக்கப்படும் என்பதனை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" – என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், கொங்கணாபுரம் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

சேலம் மாவட்டம், கன்னந்தேரி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. K. வடிவேலு என்பவர் தனது 10.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட கொங்கணாபுரம் டவுனில் திரு. M. ராஜா என்பவர் பேரூராட்சியால் வழங்கப்பட்ட வரைபட அனுமதிக்கு மாறாகவும் மற்றும் பேரூராட்சியின் அனுமதியின்றி விதிமீறி 4 மாடி கட்டடம் கட்டியுள்ளார் என புகார் தெரிவித்துள்ளார்.

கொங்கணாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட, சங்ககிரி ரோடு, பிள்ளையார் கோவில் தெரு பகுதியில் அமைந்துள்ள கதவு எண்கள் 7/4/18/1 முதல் 7/4/18/3 முடிய உள்ள திரு. M. ராஜா என்பவருக்கு பேரூராட்சியால் தரைதளம், முதல் தளம் மறறும் இரண்டாம் தளம் கட்டடத்திற்கு தலா 366 சதுர அடி வீதம் மொத்தம் 1098 சதுர அடி கட்டடத்திற்கு மட்டும் 02.06.2015 அன்று வரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ள நிலையில், தரை தளம், முதல் மற்றும் இரண்டாம் தளங்களின் அளவீடு செய்ததில் தலா 608 சதுர அடியில் வரைபட வரன்முறை அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது எனவும், மேலும், பேரூராட்சியின் அனுமதி வழங்கப்படாத 3வது தளத்தில் 36 x 19 என்ற அளவீட்டில் 10க்கு 10 அளவில் ஒரு ரூம் மற்றும் மூன்று கழிப்பறைகளும் வரைபட வரன்முறை அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளது எனவும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் கட்டட உரிமையாளர் திரு. M. ராஜா என்பவருக்கு சார்பு செய்யப்பட்ட அறிவிப்பு வாயிலாக அறிய முடிகிறது.

பேரூராட்சியின் அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டுள்ளதால், கட்டட உரிமையாளர் திரு. M. ராஜா என்பவருக்கு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புறம் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் கீழ் உரிய அறிவிப்புகள் பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, மேற்காணும் சட்டத்தின் கீழ் கொங்கணாபுரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கையை எதிர்த்து கட்டட உரிமையாளர் திரு. M. ராஜா என்பவர் மாண்பமை எடப்பாடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதிமன்ற நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். O.S. No.97/2024 மற்றும் 1A No. 03/2024 in O.S. No.97/2024) தொடர்ந்து, அவ்வழக்கு நிலுவையில் உள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது.

இந்நிலையில், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:-

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to
(a) xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1962 or any matter pending before a Court.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கொங்கணாபுரம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட கொங்கணாபுரம் டவுனில் திரு. M. ராஜா என்பவர் பேரூராட்சியின் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டியுள்ளதை அகற்றிட உரிய அறிவிப்புகள் பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை எதிர்த்து திரு. ராஜா என்பவரால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கானது நிலுவையில் உள்ள நிலையில் மேற்காணும் சட்டப் பிரிவு 10 (3)(b)–ன்படி இப்பொருள் தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 06ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. K. வடிவேலு,
   8/231/1, பொந்தனூர்,
   காட்டுவளவு, கன்னந்தேரி போஸ்ட்,
   சங்ககிரி தாலுகா, சேலம் மாவட்டம் – 637 102.
2. செயல் அலுவலர்,
   கொங்கணாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி,
   சேலம் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி. நகர், சென்னை – 600 028
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

7/3/25
செயலாளர்.

சென்னை–600 032